1995 மார்ச் 15]

திறப்பாடு, திறமை, விசுவாசம்--இவைகளின் அடிப்படையிலே தானே தவிர, வழக்குகளின் அடிப்படையிலே அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. குழந்தைவேலு.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவியல் நீதிமன்றங்கள் தற்சமயம் முன்சீப் கோர்ட்டாக கன்வெர்ட் செய்யப்பட்டுள்ளது. அந்த கோர்ட்களில் தனியாக கவர்ன்மென்ட் பிளீடர்ஸ் நியமிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியமிக்கப்படமாட்டார்கள். ஏற்கெனவே சில இடங்களிலே வேலைகள் குறிப்பாக ஜுடிஷியல் மேஜிஸ்ட்டிரேட் கோர்ட்களில் குற்றவியல் வழக்குகள் குறைவாக இருந்த காரணத்தினாலேதான், அதைச் சீரமைக்கின்ற பணியாக, ஸ்ட்ரீம்லைன் செய்வதாக, பேக்கேஜ் ஸ்கீமாக கொண்டுவரப்பட்டு இருக்கிறது. நீதிபதிகளுக்கும் போதுமான வேலை இருக்கும்; அரசு வழக்கறிஞர்களுக்கும் புதிய திட்டத்தின்படி போதுமான வேலை இருக்கும்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 3, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

3—

குறிஞ்சிப்பாடி தொகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

**26073-திரு. கு. சிவசுப்பிரமணியன்:*

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) குறிஞ்சிப்பாடி தொகுதி, தீர்த்தனகிரி பஞ்சாயத்து, குளத்துமேடு, அனுகம்பட்டு ஊராட்சி, தொட்டில்தோப்பு ஆகிய இடங்களில் வசிக்கும் தகுதியுள்ள மக்களுக்கு மனைப்பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1995 மார்ச் 15

(அ) இல்லை. ஏனெனில் தீர்த்தனகிரி மதுரா, குளத்துமேடு ஆதி திராவிடர்களும் மற்றும் கடலூர் வட்டம், அனுகம்பட்டு மதுரா, தொட்டி தோப்பு காலனியில் உள்ள மக்களும் தற்போது குளம் புறம்போக்கில் வீடு கட்டி வசித்து வருகின்றனர். நீர் வழிப் புறம்போக்கு நிலத்தை வகை மாற்றம் செய்து மனைப்பட்டா வழங்க தடை உள்ளதால் இவர்களுக்கு மனைப்பட்டா வழங்க இடமில்லை. இருப்பினும் ஆதி திராவிடர்களும், மலைவாசி மக்களும் குடியிருந்தால் அது அரசுக்குத் தேவையானாலும் உடனடியாக அவர்களை அகற்றாமல் ஆதிதிராவிடர்களுக்காக நில எடுப்பு மூலமாகவோ அல்லது வேறு எங்கேயாவது அரசு புறம்போக்கு நிலம் இருந்தாலும் கொடுக்க வேண்டுமென்று தனியாக தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு இருப்பதால் யாரையும் அப்புறப்படுத்துவதில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதி காத்து சரித்திரத்தில் நிலையான இடம் பெற்றுவிட்ட சமூகநீதி காத்த வீராங்கனையாம், ஆறுகோடி தமிழ் மக்கள் நெஞ்சத்தில் நீங்காத இடம் பெற்றுவிட்ட நமது இதயதெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில்தான் இப்படி போர்க்கால அடிப்படையில் அரசாணை ஒன்று பிறப்பிக்கப்பட்டு, ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்று சொன்ன அண்ணா அவர்களுடைய எண்ணத்தை இன்றைக்கு நம்முடைய பொற்கால ஆட்சியில் நிறைவேற்றி வருகிறோம். தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்தில், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் வசிக்கிற காரணத்தால், அங்கே பல்வேறு இடங்களில், இப்படிப்பட்ட இடங்களில் மக்கள் குடியேறி, தொன்றுதொட்டு பன்னெடுங்காலமாக வசித்துக் கொண்டு வருகிறார்கள். அப்படி வசிக்கிற அந்த இடத்திற்கு குளம், மேய்ச்சல் நிலம், நீர்வழிப் புறம்போக்கு என்று சொல்லி, அதையெல்லாம் அரசு அலுவலர்கள், 50, 60 ஆண்டுக்காலமாக குடியிருந்தாலும் கூட, அதை கொடுக்க மறுக்கிறார்கள். அங்கே குளமோ மற்ற நிலையோ இல்லாதிருந்தாலும் கூட அதை அரசு அலுவலர்கள் இன்றைக்கு இருக்கிற நிலையில் அதை சரியான முறையில் கவனிக்காமல் அவர்களுக்கு பட்டா வழங்கிட மறுத்து வருகிறார்கள். அதை நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஏழையெளிய மக்களுக்கு அவர்கள் கூறியதைப்போல இந்த

1995 மார்ச் 15]

மனைப்பட்டா வழங்க உடனடியாக நடவடிக்கையெடுக்க அரசு மூலமாக முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருப்பது அரசுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும் தெரியவந்தபோது, இப்படி நிலமாற்றம் செய்வது அரசுக்கு வந்துதான் அதிகாரம் பெற வேண்டுமென்ற நிலை இருக்கிறதால் முதன்மை ஆணையாளர் மற்றும் நில நிர்வாக ஆணையாளர், நில நிர்வாக ஆணையாளர், நிலச் சீர்திருத்த ஆணையாளர், இந்த மூன்று பேர்களுக்கும் இருக்கிற மாவட்டங்களைப் பிரித்து கொடுத்து அங்கேயிருக்கிற மந்தைப் புறம்போக்கு, மேய்ச்சல் புறம்போக்கு இவைகளை கொடுக்கக் கூடாது என்று உத்தரவு இருந்தாலும், இவைகளுக்கு இந்த உத்தரவைத் தளர்த்தி, மாவட்டந்தோறும் இவர்கள் சென்று இவைகளைச் செய்ய வேண்டுமென்று 3 திங்கள் அவகாசம் கொடுத்து, அந்த 3 திங்களில் இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில் எந்த மாவட்டத்திலும் மேய்ச்சல் புறம்போக்கு அல்லது மந்தைப் புறம்போக்கு அல்லது அரசு புறம்போக்கு இருந்ததை அங்கே ஆதி திராவிடர்கள் அல்லது ஆதி திராவிடர்களோடு சேர்ந்திருக்கிற மற்ற வகுப்பினர், தகுதி படைத்தவர்கள் எல்லோருக்குமே கொடுத்து முடிந்துவிட்டது. அதை உங்களுக்கு சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால் இந்த ஆண்டு அரசு பட்டா கொடுக்க வேண்டியது ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பட்டாக்கள்தான் கொடுக்க வேண்டும். ஆனால் இதுவரைக்கும் கொடுத்தது-இன்னும் ஒரு மாதம் இருக்கிறது. இதுவரை கொடுக்கப்பட்ட பட்டா ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து 659 பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. 43 விழுக்காடு அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அவசர நடவடிக்கை காரணமாக என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தா. வேடியப்பன்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது அனைத்து மந்தைவெளி புறம்போக்கு எல்லாம் பட்டா கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். இந்த நீர்பிடிப்பு ஏரி புறம்போக்கு எதுவாயினும் நீர்பிடிப்பு இல்லாத இடங்களில் வீடு கட்டி பல ஆண்டுக்காலமாக ஆதி திராவிட மக்களும், அருந்ததி மக்களும் பல இடங்களில் வசித்து வருகிறார்கள். அதேபோன்று பாட்டைப் புறம்போக்கிலே

நிலத்தையொட்டியுள்ள கிராமப் பகுதிகளிலே எல்லாம், சாலை ஓரங்களில் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்யாமல்- ஓரத்திலே சாலைக்குப் போக மீதமுள்ள இடத்திலே ஆதி திராவிட மக்களும் அருந்ததியர் மக்களும் நிறைய இடங்களில் வசித்து வருகிறார்கள். இப்படிப்பட்ட இடங்களிலே, சாலை வசதிக்குப் பிரச்சினையின்றி உள்ள இடங்களிலே, ஏரிகளில் நீர்ப்பிடிப்பு இல்லாமல் இருந்து வீடுகள் கட்டியுள்ள பகுதிகளிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்டா வழங்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-20*

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே இதைப்பற்றி நான் விளக்கமாகத் தெரிவித்தேன். ஆதி திராவிட மக்களானாலும் சரி, மலைவாழ் மக்களானாலும் சரி, அரசுக்குத் தேவையான நிலங்களில் அவர்கள் ஆக்கிரமிப்பு செய்திருந்தாலும் அவர்களை அப்புறப்படுத்தக்கூடாது என்று தனியாக ஒரு உத்தரவு இப்போது போடப்பட்டிருக்கிறது. அவ்வாறு போடப்பட்டு இருந்தாலும், அவர்களுக்கு விரைவில் அரசு நிலங்களையோ, எடுப்பு மூலமாகவோ மாற்றும் இடம் கொடுக்கிற வரையிலும் அவர்கள் இருப்பார்கள். நீர்ப்பிடிப்பு என்பதைப் பற்றி கொஞ்சம் விவரமாக நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நீர்ப்பிடிப்பு இடம் என்கிறபோது, அங்கே நீர் இருக்க வேண்டியதில்லை. நீர் இல்லாவிட்டாலும், மழை பெய்கிறபோது, தண்ணீர் எல்லாம் அங்கே போய் நிலத்தடி நீரை உருவாக்குகிற இடம் அது. அப்படி நீர்ப்பிடிப்பு இடம் என்று சொல்லி, அதை எல்லாம் பட்டா கொடுத்து விட்டால், பிறகு நிலத்தடி நீர் இல்லாமல் போய்விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு உணவு அமைச்சர்.

4—

புதுக்கோட்டை மாவட்டத்தில் நுகர்வோர் நீதிமன்றம் அமைத்தல்

39943*-திரு. சி. குழந்தைவேலு:**

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு நுகர்வோர் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?